# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www.tneo.gov.in


## முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்

### மேல்முறையீட்டு மனு எண் 80/2015

திரு. S.K. ராஜா,
த.பெ. சமுத்திரநாடார்,
கதவு எண் 3/11, புதுத் தெரு,
முத்துகிருஷ்ண பேரி,
கழுநீர்குளம் கிராமம்,
ஆலங்குளம் தாலுகா,
திருநெல்வேலி மாவட்டம். . . . மேல்முறையீட்டாளர்
(திரு. S.K. ராஜா)

எதிர்

1. உதவி பொறியாளர்/பகிர்மானம்,
திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அடைக்கலப்பட்டினம் 627 808,
ஆலங்குளம் தாலுக்கா,
திருநெல்வேலி மாவட்டம்.

2. உதவி செயற்பொறியாளர் / பகிர்மானம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஆலங்குளம்,
திருநெல்வேலி மாவட்டம்.

3. மேற்பார்வை பொறியாளர்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மகாராஜா நகர்,
திருநெல்வேலி மாவட்டம். . . . . எதிர்மனுதாரர்கள்

(திரு. அருண், உதவி பொறியாளர்/அடைக்கலப்பட்டிணம்(பொறுப்பு)
திரு.G. குத்தாலிங்கம், உதவி செயற்பொறியாளர்/ஆலங்குளம்)

**<u>கேட்புரை நாள் : 07–01–2016</u>**

**<u>ஆணை நாள் : 21–01–2016</u>**

திரு. S.K. ராஜா, த/பெ. சமுத்திர நாடார், முத்துகிருஷ்ணபேரி அவர்களின் 5.10.2015 நாளிட்ட மனு மேல் முறையீட்டு மனு எண் 80/2015 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுவின் மீது மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை 7.01.2016 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் கேட்புரையின் பொழுது இரு தரப்பினராலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறை தீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## <u>ஆணை</u>

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

மின் குறைதீர்ப்பாளர் ஆகிய தாங்கள் கருணை கூர்ந்து மேற்படி மனு உத்தரவுப்படி அவர் செலுத்தியுள்ள தொகை ரூ.43,150/– ல் உண்மையான மற்றும் நியாயமான செலவினங்களை கழித்து மீதித் தொகையினை அவருக்கு வழங்க உத்தரவிட வேண்டி இந்த மேல் முறையீட்டை அனுப்பியுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1. திரு. S.K. ராஜா, அவர்கள் அவரது இடத்தின் வழியாக செல்லும் தாழ்வழுத்த மின்பாதை மற்றும் மின் கம்பத்தையும் நீக்க வேண்டும் என்று 23.5.2014 ல் மனு அளித்துள்ளார். மேலும், உயர் அழுத்த மின்பாதையை மாற்றி அமைக்கவும் தனியாக ஒரு மனு கொடுத்துள்ளார்.

2.2. மேற்கண்ட தாழ்வழுத்த மின்பாதை மற்றும் மின் கம்பத்தை மாற்றியமைக்க ரூ.42,600/– மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்த வேண்டும் என்றும், அந்த தாழ்வழுத்த மின் பாதையை

மாற்றி அமைக்க 33 கேவி உயர் அழுத்த மின் பாதையையும் உரிய பாதுகாப்பான உயரத்திற்கு உயர்த்துவதற்காக ரூ.55,380/– மதிப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டுமென்றும் உரிமம்தாரர் தெரிவித்துள்ளார்.

2.3. மேல்முறையீட்டாளர் ரூ.42,600/ ஐ 30.6.2014 ல் செலுத்தியுள்ளார். வேலை தொடங்கப்பட்டு சில வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆனால், உயர் அழுத்த மின் பாதையில் செய்ய வேண்டிய மாற்றங்களுக்கான மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்படாமையால், மேல் முறையீட்டாளரின் வேண்டுகோளான மின்பாதையை மாற்றி அமைத்தல் முழுமையாக நடைபெறவில்லை.

2.4. மேல்முறையீட்டாளர், உயர் அழுத்த மின்பாதையை மாற்றியமைக்க மேலும் பணம் செலுத்த தன்னால் முடியாது என்று தெரிவித்து, அவர் செலுத்திய தொகையில் வேலையினை முடித்து, அதிகமாக அவரிடம் பெற்று வந்த தொகையை திரும்ப தருமாறு கோரி மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். மன்றத்தில் அவர் தனக்கு மின்பாதை மாற்றம் வேண்டாம், அவர் செலுத்திய தொகையை திரும்ப அளிக்க வேண்டும் என்று கோரியதற்கிணங்க மனுதாரரின் மதிப்பீட்டில் இதுவரை செய்த வேலைக்கான தொகையை கழித்து மீதமுள்ள தொகையினை வழங்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்தரவில் அதிருப்தியுற்ற மேல் முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மன்றத்தின் ஆணை:</u>

3.1 திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 18.4.2015 அன்று தெரிவித்துள்ளது. அதில் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *“26.2.2015 அன்று நடைபெற்ற நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் திரு. S.K. ராஜா, அவர்களின் மனு விவாதிக்கப்பட்டு மேற்படியாரின் இடத்தினை நேரில் சென்று ஆய்வு*

*செய்து எதிர்வரும் மன்றத்தில் மீண்டும் எடுத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டது. அதன்படி செயற்பொறியாளர் / விநியோகம் / தென்காசி அவர்கள் செயற்பொறியாளர் / கிராமபுறம் / திருநெல்வேலி அவர்களோடு நேரில் சென்று இடத்தினை ஆய்வு செய்து அறிக்கையினை சமர்ப்பித்தார். 18.4.2015 அன்று நடைபெற்ற நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் திரு. S.K. ராஜா, அவர்களின் மனு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விவாதம் செய்யப்பட்டது. விவாதத்தில் செயற்பொறியாளர் / விநியோகம் / தென்காசி அவர்களின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள இரண்டு வாய்ப்புகள் குறித்து மனுதாரரிடம் எடுத்துக் கூறப்பட்டது. முதல் வாய்ப்பில் நுகர்வோர் செலுத்திய கட்டணத்திற்குள் மின் பாதையை மாற்றம் செய்து மீதி தொகை திருப்பி தர இயலும் என்றும் இரண்டாவது வாய்ப்பில் நுகர்வோர் செலுத்திய கட்டணத்தை விட கூடுதலாக சிறிதளவு தொகையே செலுத்த வேண்டி வரும் என்று தோராயமாக கணக்கீடு செய்து கூறப்பட்டது. மேற்படி வாய்ப்புகளில் முதல் வாய்ப்பில் மனுதாரரின் பக்கத்து நிலத்தின்உரிமதாரரின் இடத்தில் இருந்து மின் பாதை இழுக்கவும் மற்றும் அருகில் உள்ள வேப்ப மரத்தை வெட்ட வேண்டி வரும் என்றும் இரண்டாவது வாய்ப்பு எனில் மனுதாரர் இடத்தில் உள்ள புளிய மரத்தை வெட்ட வேண்டி வருமென்றும் எடுத்துக் கூறப்பட்டது. மனுதாரர் மேற்படி இரண்டு வாய்ப்புகளிலும் திருப்தி இல்லாததால் தனக்கு மின்பாதை மாற்றம் செய்ய வேண்டாமென்றும் மனுதாரர் செலுத்திய தொகையினை திருப்பி அளிக்க கேட்டுக்கொண்டதற்கிணங்க மனுதாரருடைய மதிப்பீட்டில் பணி ஆணையில் இதுவரை செய்த வேலைகளைக் கழித்துக் கொண்டு மனுதாரருக்கு சேர வேண்டிய தொகையினை உடனடியாக திருப்பி அளித்து எவ்வளவு தொகை திருப்பி அளிக்கப்பட்டது போன்ற விவரங்களை மன்றத்திற்கு 15 தினங்களுக்குள் தெரிவிக்க செயற் பொறியாளர் / கிராமபுறம் / திருநெல்வேலி அவர்களுக்கு மன்றம் உத்தரவிட்டு தீர்வு செய்கிறது.”*

4. <u>தாமதத்திற்கு மன்னிப்பு:</u>

4.1 திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 18.4.2015 அன்று வழங்கியுள்ளது. எனவே, மேல்முறையீடு, 17.5.2015 ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் மேல் முறையீடு 142 நாட்கள் தாமதமாக 8.10.2015 ல் தான் மின் குறைதீர்ப்பாளரின் அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

4.2 மேல் முறையீட்டாளர் அவர் உடல் நலம் சரியில்லாததால் மேல்முறையீடு செய்ய காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்து அதனை மன்னித்து மனுவை விசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

4.3 மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறை தீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதித் தொகுப்பின் விதி 8 ன் படி மேல் முறையீட்டு மனுவை குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள்

தாக்கல் செய்யாமல் இருந்தமைக்கு போதிய காரணம் இருந்ததென்று மின்சார குறை தீர்ப்பாளர் திருப்தியுற்றால் மேல் முறையீட்டு மனுவை குறிப்பிட்ட 30 நாட்களுக்கு பின்பும் மின்சார குறைதீர்ப்பாளர் ஏற்றுக்கொள்ளலாம் என்பதால், மேல்முறையீட்டாளரின் தாமதம் மன்னிக்கப்பட்டு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்படுகிறதென்று தீர்வு செய்யப்படுகிறது.

5. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>

5.1. எதிர்மேல்முறையீட்டாளர்களிடம் அவர் செலுத்திய தொகை ரூ.43,150/—ல் செலவினைக் கழித்துக் கொண்டு மீதம் உள்ள தொகையினை தனக்கு வழங்க வேண்டும். ஆனால் அதனை அவர்கள் வழங்க மறுத்தும், அவரது பணத்தினை மோசடி செய்யவும் முயற்சி செய்கிறார்கள். எனவே, இதனை எதிர்த்து மேல்முறையீட்டினை தாக்கல் செய்துள்ளார்.

5.2. அவர் செலுத்திய தொகையில் அதிகமான அளவு செலவாகிவிட்டதாக எதிர்மனுதாரர்கள் குறிப்பிடுகிறார்கள். இது தவறு ஆகும்.

5.3. அவர் செலுத்தியுள்ள தொகையில் செலவான விவரங்களை எதிர்மனுதாரர்கள் தன்னிடம் காண்பிக்கவில்லை என்றும் இது தவறு என்றும் குறிப்பிட்டுள்ளார்.

5.4. எவ்வித செலவும் உண்மையில் ஏற்படவில்லையென்றும் ஆனால், அவரை கஷ்டப்படுத்தி அவரது பணத்தினை மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கில் செய்யாத செலவினை செய்ததாகக் கூறி யாதொரு ஆதாரமும் இல்லாமல் எதிர்மனுதாரர்கள் அவரது பணத்தினை மோசடி செய்ய நினைக்கிறார்கள் அது தவறு ஆகும்.

6. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:</u>

6.1. மனுதாரர் திரு. எஸ்.கே.ராஜா, த.பெ. சமுத்திரநாடார், முத்து கிருஷ்ணபேரி அவர்கள் ஆலங்குளம் உபகோட்டம், அடைக்கலப்பட்டிணம் பிரிவிற்கு உட்பட்ட முத்து கிருஷ்ணாபேரி விநியோக பகுதியில் கழுநீர்குளம் கிராமம் புல எண் 321/20 ல் உள்ள அவர்களது இடத்தின் குறுக்காகச் செல்லும் தாழ்வழுத்த மின் பாதையை மாற்றியமைக்க கோரும் விண்ணப்பம்

மற்றும் மேற்படி மின் பாதையை மாற்றியமைக்க வசதி செய்யும் வகைக்கு உத்தேச தாழ்வழுத்த மின் பாதைக்கு குறுக்காகச் செல்லும் 33 கேவி உயரழுத்த மின் பாதையை உரிய பாதுகாப்பான உயரத்திற்கு உயர்த்துவதற்கான விண்ணப்பம் ஆகியவை அவற்றிற்கான பதிவு கட்டணம் முறையே ரூ.50/– மற்றும் ரூ.500/– ஆக மொத்தம் ரூ.550/– விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. விண்ணப்பங்களின் பதிவு எண் 034/2014/2015 நாள் 26.5.2014 மற்றும் 035/2014–2015 நாள் 26.5.2014 ஆகும்.

6.2. தாழ்வழுத்த மின்பாதையை மாற்றியமைக்க அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.42,600/– ஆகும். மேற்படி தொகையை செலுத்த 9.6.2014 அன்று விண்ணப்பதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு விண்ணப்பதாரரால் மேற்படி தொகை 30.6.2014 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

6.3. 33 கேவி உயரழுத்த மின் பாதையை உயர்த்துவதற்கான மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு மதிப்பீட்டு தொகை ரூ.55,380/– செலுத்த 20.6.2014 அன்று விண்ணப்பதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி உயர் அழுத்த மின் பாதையை உயர்த்துவதற்கான மதிப்பீட்டுத் தொகை விண்ணப்பதாரரால் செலுத்தப்படவில்லை.

6.4. மனுதாரர் உரிய இரண்டாவது மதிப்பீட்டு தொகையை செலுத்தாமல் நுகர்வோர் குறைகள் தீர்க்கும் மன்றத்தை அணுகினார் அவர் மன்றத்தில் தனக்கு மேலும் தொகை செலுத்த இயலாது என்றும் ஏற்கனவே தான் செலுத்திய தொகையை திருப்பி தருமாறும் கேட்டுக்கொண்டார்.

6.5. தாழ்வழுத்த மின் பாதையை மாற்றியமைக்க அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின் மீது மனுதாரரால் செலுத்தப்பட்ட தொகை ரூ.42,600/– ஆகும். ஆனால், மேல் முறையீட்டு மனுவில் மனுதாரரால் இரு விண்ணப்பங்களுக்கும் செலுத்தப்பட்ட விண்ணப்பப் பதிவு கட்டணம் ரூ.550/–ஐயும் சேர்த்து ரூ.43,150/– என தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

6.6. மனுதாரர் செலுத்திய மதிப்பீட்டு தொகையிலிருந்து முடிக்கப்பட்ட பணிக்கான தொகை ரூ.22,548/– பிடித்தம் செய்யப்பட்டு திருப்பி அளிக்க வேண்டிய தொகை ரூ, 20,052/– ஐ திருப்ப பெற்றுக் கொள்ள Advanced Stamped Receipt கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. இது வரை மனுதாரர் Advanced Stamped Receipt கொடுக்கவில்லை. அதனால் அவருக்கு உரிய தொகை அளிக்கப்பட முடியவில்லை. மனுதாரர் குறிப்பிட்டது போல கூடுதல் தொகை எதுவும் கணக்கிடப்படவில்லை. கணக்கீட்டுதாள் மனுதாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

6.7. மனுதாரருக்கு திருப்பி அளிக்க வேண்டிய தொகை குறித்த 9.7.15 நாளிட்ட அறிவிப்பை 14.7.2015 அன்று நேரில் அளித்த போது பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார். எனவே மேற்படி அறிவிப்பு பதிவு தபாலில் 15.7.2015 அன்று அன்னாரது முகவரிக்கு அனுப்பப்பட்டது. தபாலை அவர் பெற்றுக் கொள்ளாததால் அந்த கடிதம் 20.7.15 அன்று அடைக்கலப்பட்டினம் அலுவலகத்தில் திரும்ப பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி அறிவிப்பை மனுதாரருக்கு தெரிவிக்கும் வகையில் மனுதாரரின் வீட்டு கதவில் கழுநீர்குளம் கிராம நிர்வாக அலுவலரின் முன்னிலையில் 20.7.15 அன்று சார்பு செய்யப்பட்டுள்ளது. செலவு விவரங்களைப் பற்றி தெரிவிக்கவில்லை என்பது உண்மையல்ல.

6.8. செலவுத்தொகை உண்மையில் முடிக்கப்பட்ட பணிகளுக்கும் அது சம்பந்தமான செலவினங்களுக்கும் விதிகளின் படியே கணக்கிடப்பட்டுள்ளது. முடிக்கப்பட்ட பணிக்கான செலவு தொகைக்கான கணக்கு மனுதாரருக்கு செயற்பொறியாளர் / கிராமபுறம் / திருநெல்வேலி அவர்களது அலுவலகத்திலிருந்து ஏற்கனவே கடித எண் பொது தகவல் அலுவலர் / கி /திலி/ தொநுஉ/ கோ.த.அ.அ.உ.ச. / அ. எண் 2250/15 நாள் 31.8.15 ன்படி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

7. <u>மின்குறை தீர்ப்பாளரின் கேட்புரை :</u>

7.1. மேல்முறையீட்டாளரும், எதிர் மனுதாரர்களும், தங்களுடைய வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின்குறைதீர்ப்பாளர் முன்பாக 7.1.2016 அன்று கேட்புரை நடத்தப்பட்டது.

7.2. மேல்முறையீட்டாளர் திரு. S.K. ராஜா அவர்கள் கலந்து கொண்டு அவரது வாதங்களை எடுத்துரைத்தார்.

7.3. எதிர் மனுதாரர் (1) திரு. அருண், உதவி பொறியாளர், அடைக்கலப்பட்டிணம் (பொறுப்பு) அவர்களும் எதிர்மனுதாரர் (2) திரு.G. குத்தாலிங்கம், உதவி செயற்பொறியாளர், ஆலங்குளம் அவர்களும் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

8. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

8.1. மேல்முறையீட்டாளர் திரு. எஸ்.கே. ராஜா அவர்கள் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2. தன்னுடைய நிலத்தின் வழியாக செல்லும் தாழ்வழுத்த பாதையை மாற்றுவதற்கு கொடுக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் அதிகம் என்று தெரிவித்தார்.

8.3. தன்னுடைய தாழ்வழுத்த பாதையை மாற்ற வேண்டும் என்ற மதிப்பீடு செய்யப்பட்ட வேலைகள் எதுவும் செய்யப்படாமல் இருக்கும் பொழுது ரூ.22,548/– ஏற்கனவே செலவு செய்யப்பட்டுள்ளது என்பது தவறு என்று வாதிட்டார்.

8.4. எனவே, உண்மையில் செலவான தொகையை மட்டும் கழித்து மீதமுள்ள தொகையை திரும்ப தர உத்தரவு இட வேண்டும் என்று கோரியுள்ளார்.

9. <u>எதிர் மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

9.1. உதவி செயற்பொறியாளர் / ஆலங்குளம் அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

9.2. தாழ்வழுத்த பாதை மாற்றத்திற்காக சுமார் ரூ.20165/— மதிப்புள்ள தளவாட சாமான்கள் இரண்டு மின்கம்பங்கள் உட்பட ஏற்கனவே பண்டக சாலையிலிருந்து வாங்கப்பட்டு விட்டது என்றும் அதில் ஒரு மின் கம்பம் நடப்பட்டு விட்டதென்றும் தெரிவித்தார். எனவே, அதற்கு ஆன செலவுத்தொகை மேல்முறையீட்டாளர் கணக்கில் தான் சேர்க்க வேண்டும் என்று வாதிட்டார். மேலும் ரூ, 17,634/— மதிப்புள்ள தளவாட சாமான்கள் பண்டக சாலையில் திரும்பவும் ஒப்படைக்கப்பட்டு விட்டன என்றும், வாரிய விதிகளின்படி தளவாட சாமான்களை பண்டகசாலையிலிருந்து வேலை நடைபெறும் இடத்திற்குக் கொண்டு வருவதற்கான செலவும், உபயோகப்படுத்தப்படாத பொருட்களை மீண்டும் பண்டகசாலையில் சேர்க்க ஏற்படும் செலவுகள் மேல்முறையீட்டாளரின் கணக்கில் தான் வைக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார். எனவே அவ்வாறு கணக்கீடு செய்யப்பட்டதில் ரூ.20,052/— அவருக்கு திரும்ப வழங்க வேண்டும் என்றும் அந்தத் தொகையை வாரியம் வழங்க தயாராக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

10. <u>மின்குறை தீர்ப்பாளரின் தீர்ப்பு:</u>

10.1. மேல்முறையீட்டாளர் அவருடைய நிலத்தின் வழியாக தாழ்வழுத்த மின்பாதை மற்றும் மின்கம்பத்தை அகற்ற அவர் செலுத்தியுள்ள மதிப்பீட்டு தொகையான ரூ.43,150/—ல் வாரியத்தால் செய்யப்பட்ட செலவு தொகையைக் கழித்துக் கொண்டு மீதமுள்ள தொகையை அவருக்கு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

10.2. அவர், வாரியம் மேற்கண்ட மதிப்பீட்டில் செய்துள்ள வேலைகளுக்கு ரூ.24,528/— செலவு ஆனதாக தெரிவித்தது தவறு என்று வாதிட்டுள்ளார். உண்மையான செலவான

தொகையை கழித்துக்கொண்டு மீதமுள்ள தொகையை வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

10.3. எதிர்மனுதாரர், அவருடைய அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டில் ரூ.20,165/— மதிப்புள்ள தளவாட சாமான்கள் பண்டகசாலையிலிருந்து பெறப்பட்டு வேலை நடக்கும் இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்றும், ரூ.17634/— மதிப்புள்ள தளவாட சாமான்கள் திரும்பவும் பண்டகசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்து மேற்கண்ட பொருட்களை திரும்ப ஒப்படைக்க ஆகும் செலவும், மொத்த சாமான்களை வேலை நடக்கும் இடத்திற்குக் கொண்டு செல்ல ஏற்பட்ட செலவு தொகையும் மேல்முறையீட்டாளரின் கணக்கில் தான் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று வாதிட்டார்.

10.4. மேலும், ஒரு மின்கம்பம் நடப்பட்டு விட்டது என்பதையும் தெரிவித்து, அந்தச் செலவு தொகையும், மேல்முறையீட்டாளரின் கணக்கில் தான் வரும் என்று வாதிட்டு, எனவே, ரூ.20,052/— தான் மேல் முறையீட்டாளருக்கு திரும்ப அளிக்கப்பட வேண்டிய தொகை என்று வாதிட்டார்.

10.5. மேல்முறையீட்டாளர் தான் செலுத்திய தொகை என்று ரூ.43,150/— என்று தெரிவித்துள்ளார்.

10.6. எதிர்மனுதாரர், தாழ்வழுத்த மின்பாதையை மாற்றியமைக்க அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின் மீது மனுதாரரால் செலுத்தப்பட்ட தொகை ரூ.42,600/— மட்டும் தான் என்று தெரிவித்துள்ளார். மேல் முறையீட்டாளர் தாழ்வழுத்த மின்பாதையை மாற்றி அமைக்க ஒரு விண்ணப்பம் சமர்ப்பித்து பதிவு கட்டணமாக ரூ.50/— செலுத்தியுள்ளார். மேலும், உயர் அழுத்த மின் பாதையை மாற்றியமைக்க விண்ணப்பம் சமர்ப்பித்து பதிவு கட்டணமாக ரூ.500/— செலுத்தியுள்ளார். எனவே, ரூ.550/— விண்ணப்ப பதிவு கட்டணமாக செலுத்தப்பட்டதொகை என்பதைத் தெரிவித்து அவற்றையும் சேர்த்து தான்

மேல்முறையீட்டாளர் செலுத்திய தொகை ரூ.43150/– என்று மேல் முறையீட்டாளர் தெரிவித்துள்ளார் என்று வாதிட்டுள்ளார்.

10.7. மேற்கூறிய தாழ்வழுத்த விண்ணப்பப் பதிவு கட்டணம் ரூ.50/– உயர் அழுத்த விண்ணப்ப பதிவு கட்டணம் ரூ.500/– ஆகிய இரண்டும் விண்ணப்ப பதிவு கட்டணங்கள் என்பதால், அவைகளை மதிப்பீட்டுத் தொகையுடன் சேர்க்க முடியாது. விண்ணப்ப பதிவு கட்டணங்கள் திரும்ப வழங்குவதற்கு விதிகளில் வழியில்லை. எனவே, மேல் முறையீட்டாளர் தாழ்வழுத்த மின் பதையை மாற்றி அமைப்பதற்காக அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி செலுத்திய ரூ.42600/– மட்டும் தான் அவர் செலுத்திய மதிப்பீட்டு தொகையாக கணக்கீடு செய்யப்படும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

10.8. இந்த வழக்கில் மேற்கண்ட மதிப்பீட்டில் செலவு தொகை கழிக்கப்பட வேண்டும் என்பதை மேல்முறையீட்டாளர் ஏற்றுக் கொண்டுள்ளார். ஆனால், செலவு தொகை ரூ.22,548/– என்று தெரிவிப்பது அதிகம் என்பது தான் வாதமாக உள்ளது.

10.9. மேற்கண்ட வேலை, ஒரு மின் பாதையை மின் நுகர்வோரின் வேண்டுகோளுக்கிணங்க நுகர்வோரிடம் மதிப்பீட்டுத் தொகையை முன் பணமாகப் பெற்று உரிமதாரரால் செய்யப்படும் வேலை என்பதால் நான் சம்மந்தப்பட்ட மின் வழங்கல் விதித் தொகுப்பின் விதி 5 (6) ஐ ஆராய விரும்புகிறேன். மேற்கண்ட மின் வழங்கல் விதித் தொகுப்பின் விதி 5(6) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"5. Miscellaneous charges***
*xxx xxx xxx*
*xxx xxx xxx*
*xxx xxx xxx*
***(6)Service / line, structure and equipments shifting charge***
*(1)The cost of shifting service / line, Structure and equipments shall be borne by the consumer. The consumer shall pay the estimated cost of shifting in advance in full. The copy of the estimate shall be given to the consumer. The shifting work will be taken up only after the payment is made. The estimate will cover the following:*
*(i) Materials dismantled in the old site and reusable shall be used in the new site as far as possible.*

*(ii) 10% of the present value of the dismantled and reusable materials towards charge for dismantling and charges for loading, unloading, transport to the new site/store.*
*(iii) Cost of the new materials required for the shifting work.*

*(iv) Add 5% of the cost of new materials towards loading, unloading and transport to new site.*

*(v) Add 10% of the present value of all the materials to be erected in the new site towards erection charges.*

*(vi) 5% of the present value of retrievable scrap materials towards transport charges.*

*(vii) Due credit shall be given to the consumer /applicant as below but however limited to the total estimated cost of new work:*

*(a) Book value /written down value subject to a minimum of 20% of the cost of retrievable and reusable materials but not used in the new site.*
*(b) Scrap value on the retrievable but not reusable materials at not less than 10% of its original value.*
*(viii) After completion of the work a revised estimate shall be prepared with a copy to the consumer based on the actual cost of materials, loading, unloading, transport and erection charges. If the original estimate cost is more than the revised estimate, the balance shall be refunded to the applicant/consumer within 3 months. If the original estimate cost is less than the revised estimate, the difference shall be collected from the applicant/consumer. "*

10.10 மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது ஒரு மின்பாதையை மாற்றி அமைக்க ஏற்படும் செலவு தொகையை இடமாற்றம் கோரும் நுகர்வோரே ஏற்க வேண்டும். மேலும், மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத்திற்கான தொகையை நுகர்வோர் உரிமம்தாரர் வேலையை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே செலுத்தி விடவேண்டும் என்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்கப்படவேண்டும் என்றும் தெரிகிறது. இடமாற்றத்திற்கான மதிப்பீடு மேற்கண்ட விதியில் தெரிவிக்கப்பட்டுள்ள உறுப்பினங்கள் அடங்கியதாக இருக்க வேண்டும் என்றும் தெரிகிறது.

10.11 மேற்கண்ட விதி 5(6) (viii) ன் படி வேலை முடிந்த உடன் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் மதிப்பு, ஏற்றுக்கொண்டு சென்று இறக்குதல் மற்றும் கட்டுமானச் செலவு ஆகியவற்றை உள்ளடக்கி மறு மதிப்பீடு செய்ய வேண்டுமென்றும், மறு மதிப்பீடு முதல் மதிப்பீட்டை விட அதிகமாக இருந்தால், அதிகத் தொகையை விண்ணப்பதாரரிடமிருந்தும், மறு மதிப்பீடு முதல் மதிப்பீட்டை விட குறைவாக இருந்தால் மீதித் தொகையை விண்ணப்பதாரருக்கும்

வழங்க வேண்டுமென்று தெரிகிறது. மேலும், மனு மதிப்பீட்டின் நகலும், மேல்முறையீட்டாளருக்கு வழங்கவேண்டும் என்றும் அறிய முடிகிறது.

10.12 இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள செலவு தொகை கணக்கீட்டை ஆராய்ந்து பார்க்கும்பொழுது அது மேற்கண்ட பத்தியில் கூறப்பட்டுள்ள மின் வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(6)ன் படி இல்லை என்று தெரிகிறது. இந்த வழக்கில் இதுவரை செய்துள்ள வேலைகளுக்கான செலவுத் தொகையை கழித்துக் கொண்டு மீதித்தொகையை வழங்க வேண்டுமென்று மேல் முறையீட்டாளர் கோருவதால், மேற்கண்ட மின் வழங்கல் விதித்தொகுப்பின் விதி5(6)–ல் கூறியுள்ளபடி, மேற்கண்ட மதிப்பீட்டில் செலவு செய்யப்பட்ட தொகையை சரியாக கணக்கீடு செய்து மீதித் தொகையை மேல்முறையீட்டாளரிடம் வழங்கவேண்டுமென்று தீர்வு செய்யப்படுகிறது.

11. <u>முடிவுரை:</u>

11.1. மேற்கண்ட பத்தி 10.11ல் உள்ள தீர்வின்படி, எதிர்மனுதாரர், மேல்முறையீட்டாளரின் நிலத்தின் வழியாக செல்லும் தாழ்வழுத்த மின்பதையை மாற்றியமைப்பதற்காக அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட பணிகளுக்கும் எஞ்சிய பொருட்களை பண்டகசாலை கொண்டு சென்ற செலவுத் தொகை ஆகியவற்றை மின் வழங்கல் விதித் தொகுப்பின் விதி 5(6) ற்கு இணங்க கணக்கீடு செய்து, மேல்முறையீட்டாளர் செலுத்தியுள்ள மதிப்பீட்டுத் தொகையான ரூ.42,600/– லிருந்து கழித்து மீதித் தொகையினை இந்த உத்தரவு கிடைக்கப் பெற்ற 30 நாட்களுக்குள் வழங்க வேண்டுமென்று தீர்வு செய்யப்படுகிறது.

11.2. மேற்கண்ட ஆணையை நிறைவேற்றியது சம்மந்தமான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் இந்த அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது.

11.3. மேற்கண்ட ஆணையுடன் இந்த மேல் முறையீட்டு மனு எண் 80/2015 முடிவுக்குக் கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. S.K. ராஜா,
த.பெ. சமுத்திரநாடார்,
கதவு எண் 3/11, புதுத் தெரு,
முத்துகிருஷ்ண பேரி,
கழுநீர்குளம் கிராமம்,
ஆலங்குளம் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்.

2) உதவி பொறியாளர்/பகிர்மானம்,
திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அடைக்கலப்பட்டினம் 627 808,
ஆலங்குளம் தாலுக்கா, திருநெல்வேலி மாவட்டம்.

3) உதவிச் செயற்பொறியாளர் / பகிர்மானம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஆலங்குளம்,
திருநெல்வேலி மாவட்டம்.

4) மேற்பார்வை பொறியாளர்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மகாராஜா நகர், திருநெல்வேலி மாவட்டம்.

5) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மகாராஜா நகர், திருநெல்வேலி மாவட்டம்.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – <u>மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.